# தமிழீழ ஏகச்சுடர் அன்னை பூபதி

117



## நான்காம் ஆண்டு நினைவு ஏடு

வெளியீடு: மட்-அம்பாறை மாவட்ட தொடர்பகம்-யாழ்ப்பாணம்

# தமிழீழ ஈகச்சுடர்
# அன்னை பூபதி

Srikanthaluxumy. A
11/21, Inuvil West.
Chunnakam



## நான்காம் ஆண்டு நினைவு ஏடு

வெளியீடு: மட்-அம்பாறை மாவட்ட தொடர்பகம்-யாழ்ப்பாணம்

## உள்ளடக்கம்


1. அநீதிக்கு சவால் விடுத்த அன்னை பூபதி 01
2. புரட்சியின் புயல்தான் அன்னை பூபதி 03
3. தமிழீழ மண் சிவந்தது 05
4. அன்னை பூபதி மக்கள் எழுச்சியின் ஓர் வடிவம் 07
5. அன்னை பூபதி 14
6. பூபதியே! நீ புதைக்கப்படவில்லை 38
7. தமிழர் இதயமெங்கும் வேரோடிவிட்ட விருட்சம் 43

மறுமலர்ச்சிக் கழகம்
பதிவு இல: 004
யாழ். பல்கலைக் கழகம்

# தமிழீழத்தின் தாய் அன்னை பூபதி



உண்ணாவிரதம் : 19 - 03 - 1988

ஈகச்சாவு : 19 - 04 - 1988



# அநீதிக்கு சவால் விடுத்த அன்னை பூபதி

உலக விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்புநோக்கிப் பார்க்கும்போது தமிழீழ சுதந்திரப் போராட்டம் தனக்கே உரித்தான தனித்துவச் சிறப்பம்சங்களைக் கொண்டது. உலக வரலாற்றில் எவருமே சாதிக்காத, எங்குமே நிகழ்ந்திராத, அற்புதமான அர்ப்பணிப்புக்களைக் கொண்டதாக எமது போராட்ட வரலாறு அமையப் பெற்றிருக்கிறது. இதுவே அதன் தனித்துவச் சிறப்பம்சமாகும்.

இந்த மகத்தான தியாக வரலாற்றில் அன்னை பூபதியின் அர்ப்பணிப்பு ஒப்பற்றது.

ஒரு சாதாரண தாயின் அசாதாரண துணிவாகவும், அலாதியான தேசியப் பற்றுணர்வாகவும் அன்னையின் அறப்போர் அமைந்தது. தர்மத்தின் குரலாக, தனித்து நின்று அவர் ஒரு சாம்ராஜ்யத்தின் அதர்மத்தை எதிர்த்தார். நீதியின் நெருப்பில் தன்னை எரித்து அநீதிக்குச் சவால் விடுத்தார்.

சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள் எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றவர்கள். அவர்களே சரித்திரத்தையும் படைக்கிறார்கள். அன்னை பூபதியும் ஒரு சரித்திரத்தைப் படைத்தார். ஒரு தனித்துவமான, காலத்தால் சாகாத சரித்திரத்தைப் படைத்தார்.

*இந்த புனித தாயின் ஞாபகார்தத்மாக மட்/அம்பாறைத் தொடர்பகம் வெளியிடும் நினைவு மலருக்கு எனது நல்லாசிகள் உரித்தாகுக.*

**''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''**

இப்படிக்கு

**வே. பிரபாகரன்**

**தலைவர்,**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

**தலைமைச் செயலகம்**

*தமிழீழம்.*

***31-03-1992***



# புரட்சியின் புயல்தான் அன்னை பூபதி

அன்னை பூபதி மக்கள் எழுச்சியின் ஓர் வடிவம். தமிழீழ விடுதலைப் புலிகளை மக்கள் எந்தள விற்கு நேசிக்கின்றார்கள் என்பதன் வெளிப்பாடுதான் அன்னை பூபதியின் தியாகம்.

இந்திய ஆக்கிரமிப்புப் படையினரின் அடக்குமுறைக் கும், அழிப்பு நடவடிக்கைக்கும், இனவிரோதிகளின் அடா வடித்தனங்களுக்கும் மத்தியில் எழுந்த புரட்சியின் புயல் தான் அன்னை பூபதி.

தமிழீழ மக்களின் எழுச்சி எவ்வாறு உள்ளது என் பதை உலகம் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத் தியதுதான் அன்னை பூபதியின் அகிம்சைப் போராட்டம்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பாதுகாவலர்கள். மக்கள் புலிகளோடு இரண்டறக் கலந்து நிற்கின்றார்கள். ராஜீவ் காந்தி எமது தேசத்தின் மீது படையெடுத்து,

எமது மக்களை அடிமைப்படுத்தி, தனது ஆக்கிரமிப்பை வெளிக்காட்டியபோது அதனை எதிர்த்துத் தொடுத்த புனிதப் போர்தான் அன்னை பூபதியின் சாகும் வரை உண்ணா விரதம்.

பூபதி அம்மாவின் புரட்சியினால் உலகம் ராஜீவ்காந்தி அரசின் கபட நாடகத்தை அறிந்து கொண்டது.

மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன.

தமிழீழத்தில் மக்கள் புரட்சி வெடித்தது.

மட்டக்களப்பில் மக்கள் வாய் திறந்து கதைப்பதற்கு பயந்திருந்த ஒரு சூழ்நிலையில் துணிந்து போராட்டத்தை முன்னெடுத்தவர் அன்னை பூபதி.

அன்னை பூபதி தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அணையாத தீபம்.

நூல் வடிவம் பெறும் அன்னையின் தியாக வரலாறு தமிழீழ மக்களின் விடுதலையின் உணர்வாக மிளிரட்டும்.

மக்கள் யுத்தத்தின் மூலம்,
மலரட்டும் தமிழீழம்!

வி. கருணா
விசேட தளபதி
தமிழீழ விடுதலைப் புலிகள்
மட்டக்களப்பு - அம்பாறை

19-03-1992



# தமிழீழ மண் சிவந்தது

தென் தமிழீழம் சிங்கள ஆக்கிரமிப்பினால் சூழப்பட்டு. மக்கள் அடக்கப்பட்டு. அழிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் இளைஞர்கள் விடுதலைப் புலிகளுடன் அணிதிரண்டனர்.

மக்கள் அனைவரும் விடுதலையைப் பற்றிய உணர்வினால் உந்தப்படுவதற்குத் தமிழீழத் தாயகப் பிரதேசம் சிங்களக் குடியேற்றம் மூலம் பறிக்கப்படுவதும், ஓர் காரணமாக அமைந்தன.

தொடர்ச்சியான மண் பறிப்பும், தமிழின அழிப்பும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

இவ்வாறான சூழ்நிலையில்தான் அமைதிப்படையென்று ராஜீவ் காந்தியினால் அனுப்பப்பட்ட ஆக்கிரமிப்புப் படை எமது மண்ணில் காலடி எடுத்து வைத்தது.

சிங்கள இனவெறியினால் வெந்து போயிருந்த மக்கள் தங்கள் பாதுகாப்பிற்காக வந்தவர்கள் என்று வரவேற்றார்கள்.

ஆனால் மக்களின் நம்பிக்கையில் பெரும் இடியொன்று விழுந்தது. தமிழீழத்தின் மைந்தர்கள் மீது ராஜீவின் வல்லாதிக்கப் படையினர் போர் தொடுத்தனர்.

— தமிழீழ மண் சிவந்தது.

தமிழீழ நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் அழிக்கப்பட்டனர்; அடக்கப்பட்டனர். மக்கள் கொதித்தெழுந்தார்கள்.

அகிம்சையைப் போதித்த காந்தியின் தேசத்திற்கெதிராகத் தியாகத் தீயில் குதித்தார்கள்.

மட்டக்களப்பிலே மறத் தமிழ்த் தாயின் குலத்தினர் மலையாக எழுந்தனர்.

புனிதப் போரொன்றை பூபதி உருவில் தொடுத்தனர்.

அன்னையின் உணர்வை அன்னியர் அலட்சியம் செய்தனர்.

இன்று அன்னியப் படையினர் இங்கில்லை!

அன்னை பூபதி அழியாத நினைவாக நிலையான வரலாற்றில் புகுந்தாள்.

நினைக்கின்றோம் அன்னையை இந்த நினைவு ஏட்டின் மூலமாக.

பொங்கட்டும் தமிழுணர்வு!
புயலாக எழட்டும் விடுதலையின் வேகம்!

திரு. சி. கரிகாலன்
அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப் புலிகள்
மட்டக்களப்பு - அம்பாறை.

19-03:1992

# அன்னை பூபதி
# மக்கள் எழுச்சியின் ஓர் வடிவம்

அன்னை பூபதி அவர்கள் இந்த மண்ணின் விடுதலைக்காகத் தன்னை தற்கொடை செய்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்னையின் கோரிக்கையை செவி சாய்க்க மறுத்து எள்ளி நகையாடிய அன்னியர்கள் இந்த மண்ணில் இருந்து வெளியேறி இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

சிங்கள இனவாதிகளின் பிடியிலிருந்து இந்தமண்ணை மீட்டெடுக்க விடுதலைப் புலிகள் மூன்றாம் கட்டப் போரில் ஈடுபட்டு ஒரு வருடமும் ஒன்பது மாதங்களும் கடந்து விட்டன.

ஆக்கிரமிப்பின் அகோரம் தென் தமிழீழத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. அன்று அன்னை பூபதியின் வடிவில் மக்களின் எழுச்சி ஆக்கிரமிப்புக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து, மக்கள் சக்தி புலிகளுக்குண்டு என்பதை தெளிவு படுத்தியது.

ராஜீவ் அரசின் உண்மையான நிலைப்பாட்டை தமிழர்களும், உலகமும் புரிந்து கொள்வதற்கு பூபதி அம்மாவின் புனிதப் போர் காரணமாக அமைந்தது.

ராஜீவின் வல்லாதிக்கப் படையினர் தமிழீழத்தை ஆக்கிரமித்த போது தென் தமிழீழ மக்களின் எழுச்சியைக் கண்டு நிலை குலைந்த சிங்கள ஆக்கிரமிப்புவாதிகள் இன்று தென்தமிழீழத்தில் மக்கள் எழுச்சியைத் தடுக்க பயங்கரவாத வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் 51 தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டு அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர்.

கிராமங்களில் தமிழர்கள் பண்பாட்டு மையமாக விளங்கிய இந்துக் கோவில்கள் உடைத்துத் தகர்க்கப்பட்டன. தொழில் நிலையங்கள் எரிக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்களை பயன்படுத்த முடியாத அளவிற்கு தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதுவரை கிடைத்த தகவலின்படி 1990 ஜூன் மாதத்திற்கு பிறகு இம்மாவட்டங்களில் 6468க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டும், காணாமலும் போயுள்ளனர். 2927க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் காயமடைந்துள்ளனர். எரிக்கப்பட்ட குடியிருப்புக்கள் எண்ணிலடங்காதவை. சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

1983ஆம் ஆண்டிற்கு பின்பு மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் கூட்டாகத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட பல சம்பவங்கள் உண்டு. சென்ற ஆண்டும் மகிழடித்தீவில் 123 தமிழர்கள் கூட்டாகக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாகத் தமிழ் மக்களின் பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றையும் தமிழ் மக்களையும் திட்டமிட்டு அழித்து தமிழரின் தாயகப் பிரதேசங்களின் மீது சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

தமிழீழத் தாயகத்தில் தென் தமிழீழப் பிரதேசம் பெரும்பாலும் சிங்கள ஆக்கிரமிப்பின் அகோரத்தில் அழிந்து கொண்டிருக்கின்றது.

அடக்கப்படும் மக்கள் மத்தியில்தான் எழுச்சியும், புரட்சியும் தோன்றும். இந்த அடிப்படையில் தான், அச்சுறுத்தலுக்கும் கொலைப் பயமுறுத்தலுக்கும் மத்தியில் துணிந்து துவளாது போர் தொடுத்த அன்னை பூபதியின் தற்கொடையை தமிழ் மக்களாகிய நாம் என்றும் மறக்க முடியாது. அன்றும் விடுதலைப் புலிகளை மக்கள் நேசித்தார்கள் - இன்றும் நேசிக்கின்றார்கள்.

இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையில் விரட்டப்பட்டு அகதிகளாக வாழ்கின்ற மக்கள் தங்களின் விடுதலைக்காக போராடுகின்ற விடுதலைப் புலிகளை எந்தளவிற்கு

நேசிக்கின்றார்களென்பதை தென் தமிழீழ மக்கள் மத்தியில் இன்றும் காண முடிகிறது. புலிகளை அரவணைத்து தங்களின் உணவுகளை பரிமாறி அன்புடன் - அவர்களை வழியனுப்பி வைத்து பூரிப்படைகின்ற மக்களைப் பார்த்து மனமகிழ்ந்து நிற்கின்றோம்.

அன்னை பூபதியின் எழுச்சியினால் உந்தப்பட்ட மக்கள் அகிம்சைப் போராட்டம் எமது உரிமையை சிங்கள அரசிடமிருந்து பெற்றுத்தராது. ஆயுதப் போராட்ட மூலமே இது சாத்தியமாகும் என்பதை உணர்ந்து விடுதலைப் புலிகளுடன் கைகோர்த்து நிற்கின்றனர்.

அன்று அகிம்சைப் போர் தொடுத்த அன்னையை இழந்து நிற்கின்றோம். அன்னை பூபதி அவர்களின் நினைவாக மக்கள் தங்கள் எழுச்சியைக் காட்டினார்கள். ஆனால் ஆக்கிரமிப்புவாதிகள் உணரத் தவறினார்கள். இதனால் அன்னையின் மகனைக்கூட கண்ணதாசன் என்னும் பெயரில் புலிகளின் ஆயுதத்துடன் காண்கின்றோம்.

1990ஆம் ஆண்டு அன்னை பூபதி அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தின் போது மக்களின் எழுச்சியை மட்டக்களப்பில் சிங்கள ஆக்கிரமிப்புவாதிகள் கண்ணூடாகக் கண்டார்கள். எழுச்சிப் பேரணியில் ஒரு லட்சம் தமிழ் மக்கள் கலந்து கொண்டு அன்னை பூபதியின் தற்கொடையை கௌரவித்தும், விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவை வெளிக்காட்டியும் நின்றனர்.

சிங்கள இனவாதிகள் ஏக்கமடைந்தனர். மக்களின் உண்மை நிலையை புரிந்தனர். மட்டக்களப்பின் வரலாற்றில் இவ்வாறான பேரணியை இதுவரை கண்டதில்லையென்பதை உணர்ந்தனர். இதனாலேதான் 1990 ஜூன் 11இல் சிங்கள ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் தொடங்கியபோது எண்ணிக்கையற்ற மக்களை கொன்று குவித்தனர்.

ஈழத் தமிழரின் 'பாரம்பரிய பிரதேசம்' எனப்படும் தமிழீழத் தாயகம் ஈழத் தமிழ் மக்கள் மரபு வழிச்சொத்தாகும். சிறிலங்கா அரசு எமது தாயகத்தை வடக்கு-கிழக்கு எனப்

பிரித்துக்காட்டிய போதும் எமது தாயகம் புவியமைப்பாலும், மக்கள் தொடர்பாலும் மொழிப்பண்பாட்டுத்தொடர்பாலும் வரலாற்றுச் சான்றுகளாலும், இப்பகுதியானது "ஒரே நாடு" என்றுணரத்தக்க பொதுப் பண்புகளைக் கொண்டு விளங்குவதோடன்றி 'தனிநாடு' என்ற அரசியல் பண்பும் பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகள் பேணப்படவும், எங்கள் 'தாயகம்' சிறிலங்கா அரசின் மேலாண்மையிலிருந்து தளை நீக்கம் பெறவும் தாயகத்தின் இறைமையைப் பேணவும் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற ஒரே குறிக்கோளுடன் மண்மீட்புப் போராட்டத்தில் தம்மை தற்கொடை செய்துள்ள மாவீரர்களையும், இக்குறிக்கோளை நோக்கிய வழியில் செல்லும் புலி வீரர்களையும் நாம் போற்றுகின்றோம். நமது தாயகத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தில் இதுவரை நம் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு என்னவென்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்நிலையில் சிறிலங்கா அரசும் பேரினவாதக் கல்விமான்களும், பௌத்த பீடங்களும் எமது தாயகம் 'ஈழம்' என்பதை ஏற்க மறுக்கின்றன. இத்தகைய பேரினவாதக் கும்பல்கள் எமது தாயக எல்லைக்குள் சிறிலங்கா அரசு ஆதரவுடன் திட்ட ரீதியில் சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்ளப்பக்க பெலமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இவ்வளவிற்கும் மேலாக கோடாரிக்காம்புகள் போன்று தன்னின அழிவிற்கே துணை போகின்ற சில தமிழ்க் குழுக்களின் அட்டூழியங்களோ சோகம் நிறைந்த கோரச் செயல்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் காட்டிக் கொடுக்கிறார்கள்: தமிழினத்தின் இறைமையின் கல்லறையில் உல்லாச வாழ்க்கை அனுபவிக்கிறார்கள். சிறிலங்கா அரசின் கூலிப்படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அழிவுக்கு பக்கத் துணையாக செயற்பட்டு வருகிறார்கள். தாயக எல்லைப் புறக்கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை அகதிகளாக விரட்டியடிக்கிறார்கள்.

அரச கூலிப்படையினதும், அடிப்படைகளுக்குச் சோரம் போகும் தமிழ் குழுக்களினதும், முஸ்லீம் காடையர்களின தும் இன அழிப்பு, பொருள்வள அழிப்பு எல்லைப் புறக் கிராமங்களிலிருந்து மக்களை துரத்தியடித்தல் முதலான பயங்கரச் செயல்களுக்கு தினமும் பலியாகி வருபவர்கள் பெரும்பாலும் தென் தமிழீழ மக்களே எனலாம்.

எங்கள் வளங்களில் வாழ்ந்து பண்பாட்டுச் சூழலில் வளர்ந்து எங்களது போராட்டச் சூழலில் பயிற்சிபெற்று ஈற்றில் பேரினவாத சக்திகளுக்கு அடிமைப்பட்டுத் தமிழர் களுக்கெதிராக பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்ட விழ்த்து விட்டு ஆயிரக்கணக்கான மக்களின் உயிரையும் பொருளாதார வளங்களையும் சூறையாடி வருகின்ற சில முஸ்லீம் காடையர்களினதும் பயங்கரவாத நடவடிக்கை களுக்கும் பெரிதும் தென் தமிழீழ மக்களே பலியாகி வரு கின்றனர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதலாக தென் தமிழீழத்தில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் சிறிலங்கா அரசு செயற்படுத்தி வந்துள்ளது. டி. எஸ். சேனநாயக்கா தொடக்கி வைத்த கல்லோயாக் குடியேற்றத் திட்டங்களி னால் தமிழ்ப்பாரம்பரியப் பகுதிகள் சிங்களவரின் ஆக்கிர மிப்புக்குள்ளாக்கப்பட்டன. மதுறு ஓயாத் திட்டத்தின் மூலம் சிங்களக்குடியேற்றம் தமிழர் பிரதேசங்களில் முடக்கிவிடப் பட்டது. இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வட மேற்கே சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஆங்காங்கே அமைக்கப்பட்ட பொலிஸ் நிலை யங்களும், இராணுவமுகாம்களும், தமிழர்களைப்பழிவாங்கும் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட செயல்களுக்குத் துணையாக அமைந்தன.

தென் தமிழீழத்தில் சிறிலங்கா அரசின் இராணுவ அட் டூழியங்களாலும், முஸ்லீம் மதரீதியான ஜிகாத் இயக்கத் தின் அழிப்பு நடவடிக்கையாலும் அவலத்தின் விளிம்புக்கே தள்ளப்பட்டுள்ள தென் தமிழீழ இளைஞர்கள் தமது தாய

கத்தை தாயகத்தின் வளத்தை இப் பிரதேசங்களில் தன்மானத்துடன் வாழ்வதற்கான வாய்ப்பைப் பெறும் மண்மீட்புப் போராட்டத்தில் தம்மைப் பெரிதும் இணைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அன்னை பூபதியின் போராட்ட சூழ்நிலையை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். தமிழீழ மக்களின் அவலக்குரல் கேட்டு ''தமிழ் இனத்தின் துயர் துடைப்போம்'' என்ற போர்வையில் இந்திய அமைதி காக்கும் படை தமிழீழத்தில் கால் வைத்தது. விடுதலைப் புலிகளின் எழுச்சியையும், செயல் திறன்களையும் கண்டஞ்சிய இந்திய அரசு அவ் வியக்கத்தை அழித்துவிட திட்டமிட்டது. ஆயுதக் கையளிப்பு என்ற வகையில் புலிகளைப் பலமிழக்கச்செய்து எமது இயக்கத்தை நலிவடையச் செய்யலாம் என இந்திய அரசு பகற்கனவு கண்டது. இப்பின்னணியில் சிறிலங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்து தமிழீழ மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்கிவிடும் நயவஞ்சகத்தன்மையை அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையை எதிர்த்துப் போரிடத் தொடங்கினர். இந்திய இராணுவத்தை வெளியேற்றும்படி தமிழ் மக்கள் ஒருமித்துக் குரல் கொடுத்தார்கள். இந்திய அமைதிப் படை புலிகளை வேட்டையாடித் தீர்த்துக் கட்டலாம் எனப் போர்க்கொடி உயர்த்திப்புலிகளைத் தேடித் தேடி வதம் செய்யத்தொடங்கிய காலகட்டத்தில் காந்திய வழிவந்த இந்திய அரசுடன் யுத்த நிறுத்த கோரிக்கையை முன்வைத்து இந்திய அரசு புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி சாகும்வரை உண்ணா நோன்பு மேற்கொண்டு தமிழீழத்தளை நீக்கத்திற்காக அகிம்சை வழியில் தன்னையே தற்கொடைசெய்த தமிழீழத்தாய் அன்னை பூபதியாவர்,

அனைத்துலக அரசியலரங்கில் எமது நியாயமான உரிமைப் போராட்டத்தின் தேவையை அன்னை பூபதியின் வீரச் சாவு எடுத்துக்காட்டியது; காந்தி தேசத்தின் கபடத்தைப் பாரறியப் பறைசாற்றியது. எமது போராட்டம் வெறுமனே

விடுதலைப் புலிகளின் போரல்ல. அது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை எம்மை அடக்கி யாள நினைக்கும் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எடுத்தியம்பியது.

அன்னை பூபதியின் போராட்ட வரலாறு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் வீரத்தையும், மானத்தையும் உரிமையுடன் வாழும் உணர்வையும் வெளிக் காட்டி நிற்கின்றது.

**அரசியல் பிரிவு**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**
**மட்டக்களப்பு - அம்பாறை**

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

# அன்னை பூபதி!

## அன்னை பூபதி

தமிழ் ஈழப் பாரம்பரியம் என்றும் நினைவில் வைத்திருக்கும் நாமம். தமிழ் ஈழப் பரம்பரைக்கு வீரத் தாய்க் குலத்தை என்றென்றும் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டிய சொல் அது.

ஆம்!

தமிழ் ஈழம் என்னும் குழந்தையைக் கருவிலேயே வேர் அறுக்க வந்த இந்திய வல்லாதிக்கத்தின் இராணுவப் பட்டாளம் ஒருபுறம். தமிழ் ஈழத்தின் ஜனனத்தைக் கனவிலும் காண அருவருத்த சிறிலங்கா அரசின் மிலேச்சத்தனமான இராணுவம் மறுபுறம் இடையிலே காக்கை வன்னியர்களான கைக்கூலிப் பட்டாளங்கள் வேறு.

அந்த மூன்று அசுர சக்திகளும் சேர்ந்து வெறிபிடித்து ஆடின.

தமிழ் ஈழ மண்ணிலே குருதி கொப்பளித்தது. தமிழ் ஈழத்தின் மூலைமுடுக்கெல்லாம் மரண ஓலம். ஊருக்குள் வட்டாரத்துக்கு வட்டாரம், குறிச்சிக்கு குறிச்சி சாவீடுகள்.

இந்தியன் வந்துவிட்டான். பயம் ஏன் இனி நமக்கு? அஹிம்சைப் போர் நடாத்தி வாகை சூடிய மண்ணில் இருந்து அமைதிப்படை வந்துவிட்டது என்று நிம்மதியாக மூச்செறிந்த தமிழ் மக்கள் அந்தோ பரிதாபம்! விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்களிலேயே எல்லாம் ஏமாற்று வித்தையாகிவிட்டதைத் தரிசித்தார்கள்.

''அது அமைதிப்படை அல்ல. அமைதியைக் குலைக்க வந்த பட்டாளம். அது சமாதானம் செய்ய வந்தவை அல்லவே. சமாதானத்துக்குச் சாவுமணி அடிக்க வந்தவர் கள். ஈழத் தமிழனைக் காப்பாற்ற வந்தவர்கள் அல்லர். அவனுக்குப் பாசக்கயிறு வீசவந்த எமகாதகர்கள்.''

தமிழ்பேசும் இனம் கண் கலங்கியது. திகில் அடைந் தது. செய்வதறியாது திகைத்தது.

மனித உரிமைக்குரல் எழுப்பும் புண்ணியவான்கள் வாய்பொத்தி மௌனியாகினர். உள்ளூர்ப் பத்திரிகை யாளர்களின் பேனாக்கள் இந்த அவல நிலையை எழுதிக் காட்டத் தயங்கின.

எங்கும் மரண அமைதி பயங்கரச் சூழ்நிலை. நாட் டில் நடக்கும் அனர்த்தங்களைத் தமிழனே தமிழனுடன் பேசப் பயப்பட்டான்.

பாவம்! நட்டாற்றில் தமிழ்பேசும் இனம் தத்தளித் துக் கொண்டிருந்தது. அப்பொழுது மெல்லிய குரல்கள் கிசுகிசுக்கத் துவங்கின.

ஆம்! நம் மெல்லியலார் முணுமுணுக்க ஆரம்பித் தார். ஊர் வாயை மூட உலை மூடி இல்லை அல்லவா?

தாய்க்குலம் பொறுமை இழந்தது. பெற்றவளுக்கு அல்லவா பிள்ளையின் அருமை தெரியும். கண்ணகி பாண்டியன் அவை சென்று நீதி கோரிய நிலைக்கு நம் அன்னையர் தள்ளப்பட்டனர்.

காட்டுத்தீ போல் அன்னையர் ஆவேசம் தமிழ் ஈழ மெங்கும் பரவத் தொடங்கியது.

தமிழ் ஈழமெங்கும் அன்னையர் முன்னணிகள் தாபன ரீதியாக அமைக்கப்பட்டன. பொங்கி வந்த காட்டாற்று வெள்ளம் அன்னையர் முன்னணியாக ஆங்காங்கே அமைப் புக்களைத் தோற்றுவித்தன.

மதுரையை எரித்துச் சாம்பராக்கிய கண்ணகியின் மனோதிடம் அவள் பரம்பரையில் வேரூன்றி விடாதா...!

இந்த மனத்திடம் கொண்ட மங்கையர் மென்குரல் தாய்ப் புலிகளாக உறுமின.

அந்த ஆவேச உறுமல் மட்டுமா நகரிலே பலமாக எதிரொலித்தது.

நான்கு சுவர்களுக்குள் எது நடந்தாலும் நமக்குள் இருக்கட்டும் என்று இருந்த பொன்னம்மாவும். கனகம்மாவும் முக்காட்டினுள் அடக்கமாக இருந்த பரீதாவும். பாத்தும்மாவும் வேலிக்கடப்பைத் தாண்டி வீதிக்கு வந்தனர்.

அன்னையர் முன்னணியாக அணி வகுத்தனர்.

அரசாங்க அதிபர் முதல் இராணுவ உயர் அதிகாரிகள் வரை ஆர்ப்பாட்ட ஊர்வலங்களாகச் சென்று மகஜர்கள் சமர்ப்பித்து நியாயம் கோரினர். அந்த அலுவலகப் படிகளில் இருந்து அஹிம்சைப் போரில் ஈடுபட்டனர்.

பலன் என்னவோ பூஜ்யம் தான்!

அன்னையர் மத்தியில் இது விரக்தியைத் தோற்றுவித்தது.

ஆணவம் அடங்காவிட்டாலும் பரவாயில்லை. அது தலைவிரித்தாடிக் கொண்டே இருந்தது.

பத்து மாதம் சுமந்து தாம் படாத பாடுபட்டு வளர்த்து விட்ட பிள்ளைகள் நாளுக்கு நாள் வேட்டை ஆடப்படுகின்றனர். இந்தியப்படை முகாம்கள் எல்லாம் கசாப்புக் கடைகளாக மாறி வருகின்றன.

மடியில் வைத்து அம்புலி மாமா காட்டிச் சோறூட்டி வளர்த்தெடுத்த பிள்ளைகள் தங்கள் வீட்டுத் திண்ணை

களில் அமர்ந்து ஆறுதலாக ஒரு வாய் சோறு உண்ண முடியவில்லையே!

சோறு போட அன்னை சமையறை செல்கின்றாள். மைந்தன் கை அலம்புகின்றான். அதற்குள் - ''இரைகின்றது இந்தியன் ஜீப். இந்தா ஒழுங்கையில் கசமுசா சத்தம். அடுத்த வீட்டுப் பொடியனை சோற்றுக் கையுடன் கொண்டு செல்கின்றார்கள். இது என்ன பாவம் செய்தோம். இறைவனே! எங்கள் பிள்ளைகளைக் கட்டாக் காலி மாடுகளைப் பிணைத்துச் செல்வது போல கயிறு கட்டிச் சாய்த்துச் செல்கின்றார்களே பாவிகள்'' என்று புலம்புல்.

அன்னையர் விரக்தி வீறு கொண்டெழச் செய்கிறது இந்த அவலக் காட்சிகள்.

தாய்மாரின் பொங்கி வரும் உணர்ச்சிப் பிரவாகத்தை அன்னையர் முன்னணி நிர்வாகிகள் அணைகட்டி ஆக்க பூர்வமான செயல் வடிவம் கொடுக்க முன்வந்தனர்.

காலம் காலமாகக் கண்ணகித் தெய்வத்துக்கு வைகாசிப் பூரணை தோறும் விழாவெடுத்து. அவளின் பத்தினித் தன்மையைப் போற்றிய மட்டக்களப்புத் தமிழக மாதர் இதில் முந்திக் கொண்டனர்.

''இனி யோசிப்பதில் யாதொரு பயனுமில்லை. அஹிம்சைப் போர் நடாத்தி உருவாக்கிய சுதந்திர இந்தியாவில் இருந்துதான் அமைதிப்படை வந்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகின்றது. அந்த அஹிம்சை வழியில் போராட்டம் நடாத்துவோம். மனமாற்றம் அவர்களுக்கு ஏற்படும்'' என்று அன்னையர் ஒரு முடிவுக்கு வந்தனர்.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணி நிர்வாகிகள் கூடினர். பல மணித்தியாலங்கள் கலந்தாலோசனை நடந்தது.

அன்னையர் ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானிக்கப்பட்டது.

யார் அந்த ஒருவர்! களப்பலியாகப் போகும் அந்த அன்னை யார்?

போர்க்களத்திலே மகன் புறமுதுகு காட்டி ஓடவில்லை· மார்பிலே வேல் பாய்ந்து வீரமரணத்தை வரவேற்றுள்ளான் என்று புளகாங்கிதம் அடைந்த சங்கத் தமிழ் வீரத் தாயாக இங்கு பிறப்பெடுத்திருக்கும் அந்த மாதரசி எங்கே!

"இதோ நான் வருகின்றேன்" என்கிறது அன்னை பூபதியின் கணீர்க் குரல்.

.: .: .:

அன்னை பூபதி நாற்பத்தெட்டு வயது நடுத்தர குடும்பத் தலைவி, மட்டக்களப்பு மாநிலத்தின் ஒரு கிராமத்துப் பெண்.

இம்மாநிலத்தின் வடபகுதியில் உள்ள கிரான் அவர் சொந்த ஊர்.

கிரான் ஒரு பழம்பெரும் தமிழ்க் கிராமம். மருதமும். நெய்தலும் மயங்கிய பேரூர் அது. வீரமறவர் வாழும் பூமி.

அங்கே 1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் சூரியன் கண்ணமுத்து என்ற ஏழை விவசாயிக்கும் பெரியபிள்ளை என்ற வீரத்தாய்க்கும் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தவர் அன்னை பூபதி. உடன்பிறந்தவர்கள் இரு சகோதரர்கள்; இரு சகோதரிகள்.

அக்காலக் கிராமிய வழக்கப்படி சித்திரா பௌர்ணமியில் வரும் சித்திரைக் கதை நன்நாளன்று ஏடு தொடக்

கப்பட்டு, பெற்றோர் தமது மூத்த மகள் பூபதியை ஊரில் உள்ள பாடசாலையில் சேர்த்தனர். அந்தக்கால நிலவரப்படி எழுத, வாசிக்கத் தெரிந்தவுடன் சிறுமி பூபதி தமது ஆரம்பக் கல்வியுடன் படிப்பை நிறுத்திக் கொண்டார்.

மரபு பிறழாத அக்காலக் கிராமிய சமூக சம்பிர தாயப்படி பன்னீராண்டுப் பூபதிக்கும். அவ்வூரில் உறவின ரான முத்துலிங்கம் என்னும் விவசாயிக்கும் திருமணம் நடந்தேறியது.

வேங்கையின் மைந்தர்களாக அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். அவ்விரு புதல்வர்களையும் அன்னை பூபதி தமது இரு கண்களாகப் பாதுகாத்து வளர்த்து வந்தார்.

இரண்டு புலிக்குட்டிகளோடு ஆனந்தமாக இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்த அன்னை பூபதியின் குடும்ப வாழ்வில் எதிர்பாராத விதமாகக் கணவர் முத்துலிங்கம் திடீர் நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தினார்.

வாழ வேண்டிய வயதில், வாழ்ந்து ஆகவேண்டிய பரு வத்தில் அன்னை பூபதி இளம் விதவையானார்.

அன்னை பூபதி மனம் கலங்கவில்லை. துணிச்சலுடன் செயற்பட்டார். அல்லும் பகலும் பாடுபட்டார். கண்மணி இருவரும் காளைகளாக வளர்ந்து கொண்டிருந்தனர்.

வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய வயதில் இளம் வித வையான பலர் வாடி வதங்கித்தான் போகிறார்கள். அதற்கு விடிவு காட்ட நமது சமூகம் வழிவகை செய்யா விட்டாலும் வழியாவது விட்டு வைக்கிறதா என்ன?

இந்த சமூக விவகாரத்தைப் பார்த்த நம் புரட்சிக்கவி பாரதிதாசன். 'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே - இங்கு வேரிற் பழுத்த பலா'' என்று மனம் புழுங்கினான்.

இரண்டு ஆண் பிள்ளைகளையும் தலையில் கட்டிக் கொண்டு தனிக்கட்டையாக எப்படிக் காலத்தை ஓட்டப் போகிறாய்? என்று உறவினர்கள் வேறு பூபதியை நச்சரித்தனர்.

பூபதி கடவுள் மேல் பாரத்தைப் போட்டுக் காலத்தை நகர்த்தினார்.

⁘ ⁘ ⁘

காலம் உருண்டோடியது.

பூபதி வாழ்வில் பூங்காற்று வீசியது.

ஆம்!

அவ்வூரில் தாரம் இழந்து, குழந்தை குட்டிகளைப் பராமரிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார் கணபதிப்பிள்ளை.

கணபதிப்பிள்ளை புகையிரதப் பகுதியில் பல வருட காலங்களாகக் கங்காணியாகத் தொழில் பார்த்து வருபவர். தினமும் வீட்டைவிட்டு தூர இடங்களுக்கு வேலைக் குச் சென்று தங்கி வர வேண்டியவர்.

அவர் மனைவி இரு ஆண்களையும் இரு பெண்களையும் பெற்றுவிட்டு ஐந்தாம் பிள்ளையைப் பிரசவிக்கக் கர்ப்பிணியாக இருந்தபோது காலன் வசப்பட்டு விட்டார்.

ஊர்ப் பெரியவர்கள் பார்த்து கணபதிப்பிள்ளை-பூபதி குடும்பச் சுமைகளையும். பாரங்களையும் கணித்து அவ் விருவரையும் மறுமணத்தில் இணைத்து வைத்து மறுவாழ்வு கொடுத்தனர்.

இது 1962 இல் நடந்தேறியது.

பழைமையிலும் காலத்துக்கொவ்வாத சில பாரம்பரியங்களிலும் ஊறிப்போய் விட்ட நம் சமூகத்தில் அதுவும் பழம்பெருமையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கும் கிராமிய சமூகத்தில் இது ஆறுதல் தரும் சம்பவமாகும்.

அந்த இரண்டாந்தார இல்லறம் கண்ணூறு, நாவூறு படாமல் கலகலப்பாகவே அமைந்தது.

இப் புதுத் திருமணத்தில் கணபதிப்பிள்ளை - பூபதி தம்பதிக்கு இரண்டு ஆண்களும், இரண்டு பெண்பிள்ளைகளும் பிறந்தனர்,

இப்பொழுது அன்னை பூபதி பத்து விழுதுகள் கொண்ட பலமான ஆலமரமானார்.

:: :: ::

குடும்ப வாழ்வில் நிமிர்ந்து நின்ற அன்னை பூபதிக்குத் தமிழ் ஈழத்தில் பல தாய்மாருக்கு நிகழ்ந்தது போல சோதனைகளும், வேதனைகளும் முட்டி மோதின.

அன்னை பூபதிக்கு முதல் தாரத்தில் பிறந்த இரண்டாம் மகன் திருமணமாகி ஒரு பிள்ளைக்குத் தந்தை ஆகியிருந்தார். 28 வயதான அவர் சிறிலங்கா இராணுவத்தால் துடிதுடிக்கச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அது மட்டுமா?

அவரது மூத்த மகன் திருமணமாகி நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையானபோது அதே சிறிலங்கா இராணுவத்தால் கைதாகி காலியில் உள்ள பூஸா முகாமில் நான்கு வருடகாலம் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைப்பட்டார்.

அது போதாதா?

தமது இரண்டாம் திருமணத்தின்பின் பிறந்த 23 வய தான மகனையும் அந்த இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்தனர்.

அன்னை பூபதியின் குடும்பத்தில் பேரினவாத அரக்கன் புகுந்து விளையாடினான். அவன் மனம் போனபடி அந் தக் குடும்பத்தை மிதி மிதியென மிதித்துச் சக்கையாக்கி னான்.

அன்னை பூபதிக்குச் சோதனைமேல் சோதனை. ஆயி னும், அவர் மனம் தளரவில்லை.

மாறாக, தன் வாழ்வில் குறுக்கிட்ட துன்ப துயரச் சம்பவங்களால் அவர் நெஞ்சுரம் இறுக்கமடைந்தவராகவே செயற்பட்டார்.

அன்னை பூபதி தமது சிறுபராயம் முதல் அண்டை அயலார் வருவோர் போவோர்க்கெல்லாம் பார்த்தும் பாரா மலும் உதவி செய்யும் இயல்புடையவர்.

ஊர் வேலை என்றால் முந்திரிக்கொட்டையாய் முந் திக் கொள்ளுவார் அவர். ஊர்ப் பணிகளில் அவரது பங் களிப்பு இல்லாத சிரமதானங்களோ, கோயில் விழாக் களோ. மாதர் சங்க அலுவல்களோ கிடையாது. எல்லா வற்றுக்கும் தலைகாட்டுவார். தலை கொடுத்துச் செயற் படுவார்.

கணவர் கணபதிப்பிள்ளையின் பென்சன் பணத்தையும் பொதுப் பணிக்காகச் செலவு செய்துவிட்டு வெறுங்கை யுடன் திரும்பும் சம்பவங்களும் நடந்துள்ளன.

பொதுவாழ்வில் அவருக்கு அப்படியொரு வேகமும், தாகமும். பிள்ளைகள் அனைவரும் தங்கள் தங்கள் கால் களில் நிற்கத் தொடங்கினர். கணவர் கணபதிப்பிள்ளைக் கங்காணியார் சேவையினின்று இளைப்பாறி ஓய்வூதியம்

பெறுபவராயிருந்தார். இதனால் அன்னை பூபதிக்குப் பாதுப் பணிகளில் இறங்க மேலும் வாய்ப்பு கிடைத்தது.

கணவரும் அவருக்கு இசைந்து கொடுத்தார்,

∴ ∴ ∴

பிற்காலத்தில் மட்டக்களப்பு நகரை அடுத்துள்ள நாவற் கேணியில் அன்னை பூபதி குடும்பம் வசித்துவந்தபோது மட்டக்களப்பு அன்னையர் முன்னணியுடன் தொடர்பு ஏற்பட்டது.

''நான் தமிழருக்காகச் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போகின்றேன்'' என்று அன்ன பூபதி அன்புக் கணவரிடம் குழைந்தார்.

''உன் விருப்பப்படி செய்'' என்று கணபதிப்பிள்ளை வாதப் பிரதிவாதங்களுக்கெல்லாம் இடம் வைக்காமல் பதிலளித்தார்.

கால் நூற்றாண்டு கடந்த தமது இல்லற வாழ்வில் மனைவியோடு அனுசரித்துப் போனவர் கணபதிப்பிள்ளைக் கங்காணியார்.

அன்னை பூபதி சாகும்வரை உண்ணவிரதம் இருப்பது என மட்டக்களப்பு அன்னையர் முன்னணி ஏற்றுக் கொண்டது. அதற்கான சம்மதக் கடிதத்தையும் அவா அன்னையர் முன்னணி நிர்வாகிகளுக்குக் கையளித்து விட்டார்.

அந்த மகத்தான நோன்பு ஆரம்பிக்கும் நாளும் குறித்தாயிற்று.

அன்னையர் முன்னணி சார்பில் அன்னை பூபதி ஏன் இந்த அக்கினிப் பரீட்சையில் இறங்கப் போகின்றார்?

தியாகத் தீயில் ஏன் தம்மை ஆகுதி ஆக்கப்பார்க்கிறார்... அதனால் அன்னையர் எதிர்பார்ப்புத்தான் என்ன?

மட்டக்களப்பு அன்னையர் முன்னணி அது சம்பந்த மாக பின்வரும் அறிவிப்பை விடுத்தது.

★ அமைதி காக்கவந்த இந்தியப்படை அதற்கு மாறாகத் தமிழ் ஈழத்தில் செய்து வரும் மனித வேட்டைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

★ நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்பட்டு சுமுக நிலை தோன்றத் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து தீர்வு காண வேண்டும்.

இக் கோரிக்கைகள் முன்நிறுத்தப்பட்டு ''சாகும்வரை உண்ணா விரதம்'' என்னும் அஹிம்சைப் போர் பிரகடனம் செய்யப்பட்டது.

∴ ∴ ∴

அன்று 19 03-1988 சனிக்கிழமை,

மட்டக்களப்பு எழுவானில் காலைக் கதிரவன் தியாகச் செம்மையுடன் உதயமாகின்றான்.

இதிகாசப் புகழ்பூத்த அமிர்தகழி சிறி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அதிகாலைப் பூசைக்கு கோயில் மணியோசை அழைக்கிறது.

அன்று வழக்கத்துக்கு மாறாக ஆலயத்தில் ஆயிரக் கணக்கில் அன்னையர் கூட்டம் தரிசனத்துக்குத் திரண்டிருக்கின்றனர்.

அங்கே கதாநாயகியாக நம் அன்னை பூபதி சிரமேல் கூப்பிய கரங்களுடன் மாமாங்கரை வலம் வந்து தரிசிக்கின்றார்.

கற்பூரம் கொழுத்தித் தேங்காய் அடித்துப் பிள்ளையார் தரிசனத்தோடு அந்த ஆலய முன்றலுக்கு அன்னை பூபதி சிரித்த முகத்துடன் வருகின்றார்.

அவரை ஏராளமான அன்னையர் சூழ்ந்து கொண்டு வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றனர்.

ஆலய முன்றலில் அமைந்திருக்கும் குருந்தை மரம். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு இறைவனே குருவாக வந்து ஞானோபதேச தீட்சை கொடுத்ததும் திருப்பெருந் துறையில் ஒரு குருந்தை மரத்தடியில் அல்லவா!

அந்தக் குருந்தை மரத்தின்கீழ் அமைக்கப்பட்டிருந்த மேடையை நோக்கி அன்னை பூபதி நடக்கின்றார்.

அப்பொழுது நேரம் சாயாக காலை 10—45 மணி.

அன்னை பூபதி மேடையில் ஏறி நின்று அந்த ஆலய வீதியில் திரண்டு நிற்கும் ஆயிரமாயிரம் மக்களை நோக்கி கரம் குவிக்கின்றார்,

மக்கள் கரகோசம் வான் அதிர்கிறது. அன்னையர் மத்தியில் ஒரு பெருமிதம். இறுமாப்பு.

இந்தியப் படைகளின் ஆடம்பர ரோந்துகளோ, மிரட்டல்களோ அந்த வெள்ளம்போல் தமிழர் கூட்டத்தின் எழுச்சிக்கிடையே செல்லாக்காசாகிவிட்டன.

அன்னை பூபதி மேடையில் அமைதியாக அமர்கின்றார்.

அதோ! அகிஹிம்சை யுத்தம் ஆரம்பித்து விட்டது'

"எமது பிள்ளைகள் எம்மைப் பாதுகாக்கத்தான் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் அவர்களால் நாம் பாதுகாக்கப் படுவோம் என்ற நம்பிக்கை நம்மிடையே உள்ளது. ஆனால் எம்மைப் பாதுகாக்கவே வந்த இந்தியா இன்று சிறிலங்கா இராணுவத்தைக் காட்டிலும் கொடியவர்களாகவே மாறிவிட்டனர். இதனைத் தடுக்கலாம் என்ற உறுதியுடன் நாம் இப்போரில் இறங்கியுள்ளோம். வீரமரணத்தைக் கண்டு நாம் பழகிப் போனவர்

களே! என் இறப்பை அடுத்தும் நோக்கை அடைவோம். ஒரு போதும் அன்னையர் முன்னணி தளராது'' என்று கூடியிருந்தோர் முன்னிலையில் அன்னை பூபதி சொல்கிறார்.

புல்லரித்தது.

மூத்தவராகவும், முக்கண் முதல்வனாகவும் இறைவன் ஒருசேரக் காட்சி நல்கி அருள் பாலிக்கும் அந்த சிறி மாமாங்கேஸ்வரர் ஆலய வீதியில் தேவார - திருவாசகத் திருப்பதிகங்களின் பண்ணிசை எழுகிறது.

கூட்டுப் பிரார்த்தனைகளால் ஆலய வீதியிலே பக்திப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுகிறது,

''ஓதுவோம் வாருங்கள்'' என இஸ்லாமிய சகோதரர் களின் பிரார்த்தனைப் பாடல்கள் முழங்குகின்றன.

கிறிஸ்தவ கீதங்கள் இசைக்கப்படுகின்றன.

என்ன அற்புதம்!

ஆலய முன்றலில் என்றும் கண்டிராத சர்வமதப் பிரார்த் தனை ஆரவாரங்கள்.

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட, புரட்சிக் கீதங்களாலும் உணர்ச்சி மேலிட, பக்குவமான சூழ்நிலை யில் அன்னை பூபதி சாகும் வரை உண்ணாவிரதத்தை மிக்க அடக்கத்தோடும், திடசித்தத்தோடும் மேற் கொள்ளுகின்றார்.

அன்று அவருக்கு ஆதரவு காட்டிப் பெண்மணிகள் பலர் ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பு அனுட்டிக் கின்றனர்.

அன்றிரவு முழுவதும் அன்னையராலும், பொதுமக்க ளாலும் நிறைந்து அந்த ஆலய முன்றல் இரவைப் பகலாக் கிக் கொண்டிருக்கின்றது. வருடா வருடம் அங்கு நடந் தேறும் ''தீர்த்தக் கரைக்'' காட்சியாகக் கலகலப்படைகி றது.

அடுத்த நாள் பொழுது புலருகிறது.

என்ன ஆச்சரியம்!

புத்தகப் பைகளும், கையுமாகப் பாடசாலை புறப்பட் டுப் போன மாணவரும் மாணவிகளும் எங்கே பேரணி வகுத்துச் செல்லுகின்றார்கள்!

பாடசாலைகள் பலவும் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

மட்டு மாநகரில் பல்வேறு திசைகளிலும் அமைந்துள்ள கல்லூரிகளில் இருந்து ஆயிரமாயிரம் மாணவிகள், மாண வர்கள் நகர வீதிகளில் அமைதி ஊர்வலங்களை நடாத்தி யபடி அன்னை பூபதியின் அகிம்சைப் போராட்டத்துக்கு ஆதரவு காட்டி மாமாங்கத்தை நோக்கிப் பேரணியாகச் செல்கின்றனர்,

''இந்தியப் படையே திரும்பிப் போ!''

''அன்னை பூபதியைச் சாகடிக்காதே!!''

''புலிகளுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வைக்
காண்!!!''

''தமிழீழ மண்ணைச் சுடுகாடாக்காதே!!!! '' இப்படி எழுதிய சுலோகங்கள் பேரணிகளில் காணப்படுகின்றன.

அன்னை பூபதிக்கு முன்பாக மாணவரும், மாணவிக ளும் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அன் னைக்குத் துணையாக அடையாள உண்ணாவிரதம் இருக் கின்றனர்.

இந்த எழுச்சிக் கோலங்கள் தினமும் அயர்வின்றித், தளர்வின்றி நடந்த வண்ணம் இருக்கின்றன.

பாடசாலைப் பிள்ளைகள் மாத்திரமா!

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்தும் ஒவ்வொரு நாளும் அன்னையர் முன்னணிக் கிளைகள், மாதர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், விவசாயிகள் சம்மேளனங்கள், இளைஞர் அமைப்புகள் என்றெல்லாம் அன்னை பூபதி ஆதரவுப் பேரணிகள் அன்னையை நோக்கி அலை அலையாக வந்து கொண்டிருக்கின்றன.

கூட்டத்தினைக் கட்டுப்படுத்த யுவதிகளும், வாலிபர்களும் தொண்டர் படையாக மாறினர். பொதுமக்களை ஒழுங்குபடுத்தினர்.

⁘ ⁘ ⁘

அன்னை பூபதி மக்களின் கரை கடந்த உற்சாகத்துக்கு மத்தியில்' ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் தமது ஆயுட்கால உண்ணாவிரதத்தை உறுதியோடு கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றார்.

நாளாக ஆக அன்னை பூபதியைச் சோர்வு தட்டுகிறது. தலைச் சுற்றலும் ஆரம்பிக்கின்றது போகப் போக திடீர் மயக்கத்தில் சரிகின்றார்.

எனினும் மறுகணமே தன்னைச் சுதாகரித்துக் கொள்ளுகிறார்.

வைத்தியர்கள் அவரைத் தினமும் வந்து பரிசோதித்துச் செல்லுகின்றனர். முறைப்படி வைத்திய அறிக்கைகள் நாளாந்தம் தயாரிக்கப்படுகின்றன.

அன்னை இவ்வாறு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார். இடையில் அமைதிப்படை அதிகாரிகள், இந்திய வீரர்கள் வந்து போகின்றனர்

அன்னைக்கு அனுதாபம் தெரிவிக்க வரவில்லை. மாறாக இப்போராட்டத்தின் உறுதியையும், அதற்கு மக்களிடையே ஏற்பட்ட எழுச்சியையும் கண்ட இந்திய வீரர்களுக்கு வயிற்றைக் கலக்கியது. நெஞ்சை அழுத்தியது.

அன்னையிடம் சமாதானம் சொல்லப் பார்த்தனர். அன்னையோ இந்திய வீரர்களைக் கண்டால் காளியாக மாறினார்.

மிரட்டினர் பாய்ச்சா, பலிக்கவில்லை.

கணவர் கணபதிப்பிள்ளை, மக்கள், மருமக்கள் என்று தூண்டில் போட்டு விரதத்தைக் குழப்பியடிக்க எத்தனித்தனர். ம் முடியவில்லை.

கணபதிப்பிள்ளை கங்காணியார் குடும்பம் இலேசுப் பட்டதல்ல. வீரத் தாயின் பராமரிப்பில் வளர்ந்தவர்கள் அல்லவா?

இந்தியப் படையினர் போட்ட இரையை அவர்கள் விழுங்குவதாவது, இந்தியாவின் சாணக்கியத் தந்திரங்கள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன.

மகாத்மா காந்தியின் உண்ணாவிரதங்கள், மறியல் இயக்கங்கள், சத்தியாக்கிரகங்கள் மூலம் வெள்ளையனை வெளியேற்றிச் சுதந்திரம் ஈட்டிய நவ பாரதத்திலிருந்து வந்த ஜவான்களா அண்ணல் வழியில் அன்னை பூபதி நடாத்தும் அகிம்சைப் போராட்டத்தை அலட்சியம் செய்கிறார்கள்? குழப்பியடிக்க முனைகின்றார்கள்?

உண்மையிலேயே இவர்கள் இந்திய மண்ணில் பிறந்தவர்களா? அந்த இராம இராஜ்யத்திலிருந்துதான் வந்தவர்களா? தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்றெடுத்த அத் தாயகத்திலிருந்து புறப்பட்டவர்களா?

இப்படித் தமிழ் ஈழ நாட்டவர் மட்டுமல்ல, மனித உரிமை பாராட்டுபவர்களும் ஏன் மகாத்மா காந்தியின்

அஹிம்சைத் தத்துவத்தில் மதிப்பும் - மரியாதையும் வைத்த உலக மக்களும் மூக்கின் மேல் விரல் வைத்து வியப்புற்ற னர்: ஐயுற்றனர்.

அமைதி காக்க வந்து மிஞ்சியிருந்த அமைதியையும் குலைத்துக் கொண்டிருந்த அமைதிப் படையினர் மீது சர்வ தேசங்களிலும் வாழும் மனிதாபிமானிகள் அருவருப்புக் கொண்டனர்.

:: :: ::

நாட்கள் நகர்கின்றன. அன்னையின் நாடித்துடிப்புகள் அச்சத்தைத் தருகின்றன. வைத்தியர்கள் பார்வையில் சந்தேகம் நிழலாடுகின்றது.

இனிமேல் ஊசி மருந்து பாய்ச்சுவதைத் தவிர வேறு வழியில்லை என்று வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

அன்னை பூபதியோ ''எந்தவொரு மருந்தும் எனக் குத் தேவையில்லை. நீங்கள் போய்விடுங்கள்'' என்று நா தளதளக்கக் கூறி மறுக்கின்றார்.

அந்த மயக்க வேளையிலும் தன்னை வைத்தியர்கள் நெருங்கி ஊசி போடாதவாறு எச்சரிக்கையாகவே இருந் தார்.

அன்னையின் பிடிவாதமே வெல்கிறது.

ஒரு பக்கம் மக்களின் கரை கடந்த உத்வேகம். மறு பக்கம் மனித ஜீவனைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற வைத்தியர்களின் முஸ்தீபுகள். இடையிடையே உண்ணா நோன்பைக் குழப்பியடிக்கும் இந்திய வீரர்களின் தந்திரோ பாயங்கள்.

இத்தனைக்கும் மத்தியில் அன்னை பூபதி தமது இலட் சியத்தை நிறைவேற்றிக் கோரிக்கைகளை வென்றெடுக்கத்

தமது இன்னுயிரைத் துச்சமென மதித்துச் சத்திய யுத்தத்தைத் தொடர்கின்றார்.

ஒன்று. இரண்டு. மூன்று, நான்கு ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின் மூன்று இருவாரங்களல்ல. முழுமையாக முப்பத்தியொரு நாட்கள். அந்த சத்தியப்போர் நடந்து 32 ஆம் நாளில் திடுதிப்பென்று ஓய்கிறது.

அங்கு குழுமி நின்ற மக்கள் பேசவில்லை; அசையவில்லை; அத்தனை மக்களின் கண்களும் நீரைச் சொரிகின்றனவே!

அன்னை பூபதியே பிரிந்து விட்டாயா? இத்தனை நாளுமாக இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் உறுதியுடன் இருந்த உன் எழில் உடல் என்ன சாய்ந்து விட்டதா தாயே? எந்த உயிரைப் பணயம் வைத்து தமிழ் ஈழ மண்ணுக்கு சமாதானத்தைக் கொண்டு வர களத்தில் இறங்கினீரோ அந்த உன்னத "பணயம்" பறிபோய் விட்டதா அம்மா? உன் சத்தியப் பயணம் பாதியில் முடிந்து விட்டதா தாயே[

:: :: ::

மட்டுமா நகரம் கதறி அழுகிறது. தமிழீழம் எங்கும் சோகமாகியது. ஒவ்வொரு வீட்டிலும் மரண ஓலமே கேட்கிறது.

அன்னை பூபதி உண்ணாவிரதம் பற்றியும். மக்கள் எழுச்சி தொடர்பாகவும் நாளாந்தம் முதற் பக்கச் செய்திகளாக வெளியிட்டு வந்த ஈழத்து அனைத்துப் பத்திரிகைகளும், கடல் கடந்த நாடுகளில் வெளியாகும் தினசரிகளும் தங்கள் நடுநடுங்கிய கரங்களால் அன்னையின் ஆருயிர் 19-04-1988 செவ்வாய்க்கிழமை காலை 8-45 மணிக்குப் பிரிந்த நெஞ்சைத் துணுக்குறச் செய்த அந்தச் செய்தியை சோக வரிகளில் எழுதி வெளியிட்டன.

**"பூபதி உயிர்த்தியாகம்
தமிழீழத்தில் சோக வெள்ளம்"**

இப்படி ஒரு தமிழ்த் தினசரி குறிப்பிடுகிறது. எங்கும் கறுப்புக் கொடிகளும், வெள்ளைக் கொடிகளும் தெருக்கள் ஒழுங்கைகள் எல்லாம் வாழை மரங்கள் நட்டு, துக்கம் வெளிப்படுத்தப்படுகின்றது. முக்கிய சந்திகள் தோறும் அன்னை பூபதியின் மறைவு இரங்கல் பதாகைகள் தொங்க விடப்படுகின்றன,

தத்தம் அலுவல்களை அப்படி அப்படியே விட்டவாறு ஊழியர்களும், கடைக்காரர்களும் அன்னைக்கு அஞ்சலி செய்ய திரள்கின்றார்கள். வகுப்பறைகளில் புத்தகங்களை விட்டுவிட்டு அன்னையைக் காண ஓடிவந்த மாணவர்களும் மாணவியர்களும் - அங்கு சிலையாகினர். சமையல் கட்டில் மரக்கறியும். கையுமாக இருந்த அன்னையர்களும் அப்படித் தான்.

அன்னை பிரிந்ததை எப்படித்தான் தாங்குமோ இந்த ஈழம். பூபதியம்மா...

:: :: ::

உயிர் பிரிந்த பிற்பாடும் இந்தியப் படையினர் சும்மா விட்டார்களா? உயிரற்ற அந்த உடலுக்கும் உபத்திரவம் தர முய்லுகின்றனரே!

நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் எனச் சாக்குப் போக்குச் சொல்லி அன்னையின் உடலைத் தாங்கள் பொறுப்பேற்றுப் புதைக்க எத்தனிக்கின்றனர்.

கணவர் கணபதிப்பிள்ளையைத் தனிமைக்குக் கூட்டிச் சென்று ஒரு வீரர் மிரட்டுன்கிறார்.

"நியாயம் தேடித்தான் என் மனைவி உயிர்விட்டாள்"

கணபதிப்பிள்ளை கங்காணியாரின் அச்சொட்டான பதில் இது அமைதிப்படையினருக்கு.

அன்னையர் முன்னணி உறுப்பினர்களும். உறவினர்களும், பொதுமக்களும் அன்னையின் உடலைச் சூழ்ந்து பாதுகாத்துக் கொண்டதால் பிரேதத்தை அப்புறப்படுத்தி சூட்டோடு சூடாக அழித்துவிடும் இந்தியப் படையினரின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

படையினர் தலையைத் தொங்கப் போட்டபடி முகாம் திரும்பினர்.

அன்னையர் முன்னணியின் கையே ஓங்கியது.

முகத்துவாரம் வீதியில் உள்ள மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் அலுவலகத்துக்கு அன்னையின் பூதவுடல் கொண்டு வைக்கப்பட்டு, அடுத்துள்ள விளையாட்டுத் திடலில் நிறுவப்பட்ட விசேட பந்தரில் அவ்வுடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

:: :: ::

நாலாபுறங்களிலுமிருந்து மக்கள் வெள்ளம் சாரி, சாரியாக வந்து அன்னைக்குத் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்துகின்றனர். தூய வெள்ளை ஆடையணிந்த மாணவர்களும், மாணவிகளும் ஊர்வலமாக வந்து அன்னையின் பூதவுடலைச் சுற்றி அணிவகுத்து நிற்கின்றனர்.

தியாகச் செம்மலின் புனித உடலைத் தரிசிக்கும் மக்கள் 'விம்மி விம்மி' அழும் சத்தம் அந்த நிசப்தத்தில் கேட்கிறது.

மலர் மாலைகளாலும். மலர் வளையங்களாலும் பூதவுடலும், அம்மேடையும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. சந்தனக்குச்சிகளிலிருந்து வெளிவரும் புகை வான்நோக்கிச்

செல்லுவது 'அமைதி பெறுங்கள்! உங்கள் அன்னை அங்கு தான் இருக்கின்றாள்'' என்று கூறுவது போல் இருக்கிறது.

இந்தியப் படையினரின் கழுகுப் பார்வைக்கும் அகப் படாது புலிகள் எப்படியோ மலர் வளையமொன்றைக் கொண்டு வந்து அன்னையின் புனித பாதத்தில் அர்ப் பணித்திருந்தனர்.

அதில் இந்த வாசகம் உள்ளது:

''விடுதலைக்குத் தன்னுயிர் நீத்த எங்கள் அன்னைக்கு வீர வணக்கம்''

பாம்பின் கால் பாம்பறியும். வீரியத்தை வீரனே மெச்சுவான் அல்லவா?

பல பாகங்களில் இருந்தும் ஏராளமான இரங்கற் பிரசுரங்கள் பல்வேறு சமய, பொது, கல்வி ஸ்தாபனங் களால் வெளியிடப்பட்ட வண்ணம் இருந்தன. மும்மத குருமார்கள் அன்னையருகில் வந்து பிரார்த்தனை செய் கின்றனர். கவிதாஞ்சலியும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒரு சாமான்யப் பெண்ணின் மறைவுக்கு இத்தனை மரியாதையா? இந்தியப் படையினரும், கைக்கூலிகளும் நெஞ்சம் பொருமினர். மீண்டும் அன்னையின் பூதவுட லைக் கொண்டு செல்லும் ஒரு உபாயத்தில் ஈடுபட்டு அன்னையர் முன்னணியின் எதிர்ப்பால் தோல்வி கண்டனர்.

மூன்று நாள் அஞ்சலிக்காக அன்னையின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. அன்று 22-4-1988 வெள்ளிக்கிழமை.

தமிழ் ஈழ மண்ணில் அராஜகம் அகன்று அமைதி நிலை வேண்டும் என்பதற்காக தன்னுயிர் நீத்த பூபதி இறுதி யாத்திரைத் தினம் அது. மட்டக்களப்பு நெஞ்சங்கள் எல் லாம் விம்மிப் புடைத்து வெப்புசாரம் கொண்டு வாய் விட்டு அலறித் துடிக்கின்றன.

பிற்பகல் 2-15 மணி

ஈமக் கிரியைகளைத் தொடர்ந்து அன்னையின் பூத வுடல் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் ஏற்றப்பட்டு புறப்படு கிறது.

சர்வமதப் பெரியார்கள், பொது அமைப்புக்களின் பிர முகர்கள் அன்னையர் முன்னணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அந்த இறுதிப் பவனியை ஓர் பேரணியாய் வழிநடத்திச் செல்கின்றனர்.

வெள்ளை ஆடை உடுத்தியிருந்தனர் மக்கள் அனை வரும். சோகம் தாழவில்லை என்பதை அந்த நிறம் உணர்த் தியது.

அந்த இறுதி யாத்திரையில் பத்தாயிரத்துக்கும் மேற் பட்ட ஆண்களும், பெண்களும் பெருமளவிலான மாணவர் களும், மாணவிகளும் பங்கு கொண்டதாகவும், சுமார் மூன்று மைல்கள் தூரம் நீண்டிருந்ததாகவும் யாத்திரை முடி வடைய ஏறக்குறைய ஐந்து மணித்தியாலங்கள் சென்றதா கவும் பின்னர் செய்திப் பத்திரிகைகளில் வெளியான தலைப் புச் செய்திகளில் குறிப்பிடப்பட்டது.

இறுதி யாத்திரை சென்ற வழிநெடுகிலும் பாகத்துக்கு ஒன்றாக வீதிகளின் இரு மருங்குகளிலும் வாழைகள் நடப் பட்டு, தென்னை ஓலைகளால் அலங்கரிக்கப்பட்டும் காணப் பட்டன.

ஊர்வலத்துக்கு முன்னாலும், பின்னாலும் நடுவிலும் ஒலி பெருக்கிகள் பொருத்திய வாகனங்களில் வீரமரணம் எய்திய அன்னையின் புகழ் பாடப்படுகின்றன

அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் மீளாத் துயில் கொண்டி ருந்த அன்னையின் பூதவுடலை வழிநெடுகிலும் மக்கள் நேரடியாகத் தரிசிக்கக் கூடியதாய் இருந்தது.

பூதவுடலின் அருகில் அன்னாரின் அன்புக் கணவர் கணபதிப்பிள்ளை அடிக்கடி துக்கம் தாளாமல் வாய்விட்டு அலறிக் காணப்படுகின்றார்.

வழியின் இரு மருங்கிலும் மக்கள் குழுமி நின்று கண்ணீர் மல்க மறைந்த அன்னையின் பிரிவாற்றாமையை வெளிப்படுத்தியமை பெரும் சோகக் காட்சியாகவே காணப்படுகிறது.

அன்னையை அடக்கம் செய்யவிருக்கும் ஈழத்தில் புகழ்ப்படும் நாவலடி கடலோரம் எங்கு திரும்பினாலும் மக்கள் சமுத்திரம்.

ஒரு நாள் ஒரு வாரம் அல்ல மொத்தம் முப்பத்தொரு நாட்களைக் கொண்ட ஒரு முழுமையான மாதம் தண்ணீர் கூட அருந்தாது முழு உண்ணா நோன்பு நோற்றவர் அன்னை பூபதி! தமிழ் ஈழப் பூமியில் சாந்தியும், சமாதானமும், அமைதியும் காணத் துடித்தது அவர் உள்ளம். அந்த அபிலாஷைகள் நிறைவேறாமலே அவரது ஆவி பிரிந்தது அல்லவா?

பொது இலட்சியத்துக்காகக் குடும்பப் பெண் ஒருவர் ஒரு மாத காலம் உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்தமை உலக வரலாற்றில் இதுவே முதல் சம்பவம்?

நாவலடியில் திரண்ட ஆயிரக்கணக்கானோரில் சர்வ மதப் பெரியார்கள். பொதுசனப் பிரமுகர்கள், அன்னையர் முன்னணி நிர்வாகிகள் எனக் குறிப்பிடத்தக்க சிலர் இரங்கல் உரைகள் நிகழ்த்தியபோது,

''ஒரு கிராமத்துக் குடும்பப் பெண் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டக் களத்தில் தனது மைந்தர்கள் இருவரை பறிகொடுத்தவர். சிறிலங்கா, இந்திய இராணுவத்தின

ராலும், அவர்களது கைக்கூலிகளாலும் தாமும்-குடும்பமும் தொல்லைக்குள்ளாக்கப்பட்டவர். இப்போது பெண் என்றும் பாராமல் தம் உயிரையே தமிழ் ஈழ இலட்சியத்துக்காகத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார்'' என்றார்கள்.

நாவலடி கடலோர மைதானத்தில் அன்னை பூபதியின் பூதவுடல் அடக்கம் செய்யப்படுகிறது.

அன்னையின் புனிதவுடல் மாத்திரமா அங்கு அடக்கம் செய்யப்பட்டது? கூடவே ''அகிம்சையும்'' புதைக்கப்பட்டதோ?...



# பூபதியே!
# நீ புதைக்கப்படவில்லை

ஆயிரத்து தொழாயிரத்து
எண்பத் தெட்டு
பங்குனித் திங்கள்
பத்தொன்பதாம் நாள்
தென் தமிழீழத்து
மட்டுமா நகரத்து
மாமாங்க வீதியில்
ஆரம்பமான தொரு
சாத்விக யுத்தம்,
அதை எண்ணுகையில்
கொதிக்கிறது
எங்களது ரத்தம்...

காந்தியம் போதித்த
காந்தியின பேரன்
ராஜீவ் காந்தியிடம்
இரண்டு அம்சத்து
கோரிக்கை முன் வைத்து
அகிம்சை வழியினிலே
உயிரைத் துச்சமாக்கி
பிச்சை இரந்து நின்றாள்
மதுரையில் நீதிகேட்ட
பெண்மை
கண்ணகிபோல்.

அருந்தும்
நீர் வெறுத்து
உண்ணும்
உணவொறுத்து
மாமாங்க சந்நிதியிலே
மயக்க முற்றிருந்தாள்
அன்னை பூபதியாள்.
நாட்கள் வாரமாகின
வாரங்கள் மாதமானது
அமைதிப் புறாவுக்கு
அறிவுக் கண்
திறக்கவில்லை.
அன்னையின் நிலைகண்டு
அணுவளவும்
இரங்கவில்லை.

நர வேட்டை ஆட வந்த
அரக்கர் கூட்டத்தின்
அநீதியைக் கண்டித்து
அறவழிப் போர் புரிந்த
அகிம்சைப் புறாவொன்று,
அமைதியாய் சரிந்தது
சித்திரை மாதத்து
பத்தொன்பதாம் நாளன்று
அந்தோ...!
தென் தமிழீழம் மட்டுமா?
என்
ஈழ தேசத்தின்
தேகமே
கண்ணீரால் கரைந்தது
வெள்ளைப் புறாவென்று
தன்னை
தம்பட்டம் அடித்த

ஒரு
கருநிறக் காகத்தின்
முகத்திரை கிழிந்தது.

ஓ.. ...
இந்திய ஜவான்களே!
நீங்கள்
எங்கள் நாட்டுக்கு
அமைதி காக்க வந்த
அமைதிப் படைகளா?
இல்லை
ஈழ தேசத்தில்
வாழும் உயிர் குடித்து
ஏப்பம் விட வந்த
எம தூதர்கள்
இல்லையென்றால்
அன்னை பூபதியாள்
மரணத்தில் தன்னை
அரவணைக்கும் வேளை
மார் தட்டி
கை கொட்டி
உளம் களித்திருப்பீர்களா;

அன்னை பூமிக்காய்
தன்னையே அர்ப்பணித்த
அன்னை பூபதியே!
புதைக்கப்பட்டது
உன்
பூதவுடல் மட்டுமா?
இல்லை
காந்தியம் பேசும்
காந்தி தேசத்தின்

சாத்வீக
தத்துவமும் தான்.

சாத்வீகப் போரை
உலகுக்கு காட்டிய
அண்ணல் காந்தியே!
உன் அகிம்சைத் தத்துவம்
உன் பேரனால்
சிலுவையில் அறையப்பட்டு
ஆண்டுகள்
நான்காகிப் போனதை
இன்னும் அறியவில்லையா?
இல்லையென்றால்
தியாகி திலீபனிடமும்
தாய் பூபதியிடமும்
கேட்டுத் தெரிந்து கொள்!

அகிம்சையின்
பிறப்பிடமாம்
பாரத நாட்டிற்கே
பாடம் புகட்டிய
பூபதியே!
சாத்வீகப் போரில்
தான் படைத்த சாதனையை
உன்னால்
பாரதம் இழந்தது.
அதனால்
உன் பெயர்
கின்னஸ் புத்தகத்தில்
எழுதப்படா விட்டாலும்
எங்கள் மனங்களில்
அழுத்தப் பதிந்து விட்டது!
அன்னை பூபதியே!

தேன் பாய்ந்து ஓடி
மீன் பாடும் நாட்டில்
பாடும்
மீன்கள் எல்லாம்
இன்றும்,
உன் பெயரையல்லவா
உச்சரிக்கின்றன
மீன் இனங்களே
உன்னை அர்ச்சிக்கும்போது
நாங்களென்ன
மரக் கட்டைகளா?

ஆம்
புத்த பகவானின்
புதல்வர்களாம்
அவர்களுக்கெல்லாம்
அகிம்சையின்
அர்த்தம் விளங்குமா?
அதனால் தான்;
ஆயுதம் ஏந்திய
யுத்தத்தில்
தோயும் பகைவனின்
ரத்தத்தில்
தாயக விடுதலை
காணவே
பாயும் புலியெனப்
புறப்பட்டோம்
பூபதித் தாயின்
கனவை நனவாக்க!

மட்டுநகர் ஜதார்த்தனன்

# தமிழர் இதயமெங்கும் வேரோடி விட்ட விருட்ஷம்

அண்டங்களின் உச்சியில்
அமர்ந்திருக்கிறது.
ஒரு
அக்கினி.

ஒப்பற்ற விடுதலைத் தீயென
பிரபஞ்சமெங்கும் தன்னையே
பிரகடனஞ் செய்தபடி......

அண்டங்களின் உச்சியில்
அமர்ந்திருக்கிறது
ஒரு
அக்கினி
அமைதிப்படையின்
அராஜகத்திற்கு
முற்றுப்புள்ளி வைக்க
முழங்கிய சங்கு
அந்த
பாரத அரசின்
கண்மூடித்தனத்தால்
கண்மூடிவிட்டது.

அகிலத்தின் செவிகளையே
அதிர வைத்த
இந்த
சங்கின் சப்தத்தால்......

நிச்சயம்
ஒரு சுதந்திர மண்டலம்
ஜனனமாகும்.

தமிழ் நெஞ்சங்களை
தட்டி எழுப்பிய
ஒப்பற்ற முழக்கத்தின்
உரிமைக் காரியாம்
இவளின்
கல்லறையை
கௌரவித்து வைப்போம்.

இவளின் கல்லறையில்
கற்களைப் பதிக்காதீர்கள்
உலகிலுள்ள
ஒலி அலைகள் அனைத்தையும்
ஒன்று சேர்த்து வாருங்கள்
விடுதலை முழக்கத்தால்
வீடு கட்டுவோம்.

விழிகாணாத் தொலைவிலுள்ள
விண் கோள்களும்
இவளின்
விடுதலை முழக்கத்தை
செவிமடுக்கட்டும்

தாயே...
மனிதக் குழந்தையின் பிரசவிப்பில்
மரணம் உன்னை
மணக்க வந்து
மானபங்கப் பட்டதாம்.

சமாதானக் குழந்தையின்
பிரசவிப்பில்
உன்னைச்சந்திக்க
சாவுக்கேன்
சந்தர்ப்பமளித்தாய்?

உன்
ஆவி பிரிந்த
அந்த
அவல நொடிப் பொழுதில்
உலகத்தின் உயிரினமெல்லாம்
ஒன்றுகூடி அழுத
ஓர் அதிசயம் நடந்தது.

சமாதானத்திற்கான நோபல் பரிசா?
இவளுக்கா!
சீ...... எடுத்தெறியுங்கள்
கண்டவற்றையெல்லாம் ஏன்
காவித் திரிகிறீர்கள்?
இப்போதுதான்
உண்மையான நோபல் பரிசு
உருவாகியிருக்கிறது.

உலக சமாதானத்தின்
உன்னத பரிசாக
இனிவரும் நாட்களில்
இவளையே வழங்குவோம்.

அலைகள்
அடித்துப் புரளுகின்றனவா?
சமுத்திரங்களில் இவளின்
சாம்பலைக் கரையுங்கள்!

மேகங்கள் ஒன்றோடொன்று
மோதிக் கொள்ளுகின்றனவா?
இவளின்
சமாதான முழக்கத்தை
வானத்திற்கு வழங்குங்கள்!

புயற் காற்றா?
அது இனி வரவே வராது
காற்று முழுவதிலும்
இவளின்
சமாதான முச்சல்லவா
சங்கமித்திருக்கிறது,

அமைதி மண்டலத்தின்
அத்திவாரமாக
புதைகுழி சென்ற
பொக்கிசமே......!
நீ
ஆராய்ச்சியாளர்களுக்கு
அதிசயம்!

ஈழத்தமிழரின்
இதயமெங்கும்
வேரோடிவிட்ட
விருட்சம்

படுகொலைகளை நிறுத்தக் கோரி
உன்னையே
பலி கொடுத்தாய்
பசியோடு வயிற்றைப்
பற்றி எரிய விட்டாய்,

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

உன் மரணச் செய்தி கேட்டு
உலகின்
மனச்சாட்சியே
மனவருத்தப்பட்டது.

இங்கிதம் தெரியாத—அந்த
இந்தியப்படையோ
உன்—
சமாதியில் ஏறி நின்று
சண்டை போட்டது.

இந்திராவின் இளைய மகன்
இப்போது
இரண்டாம் கட்சியில்
இருக்கிறார்.

அவர்
வெளியே உலாவ விட்ட
வேட்டை நாய்களையெல்லாம்
வி. பி. சிங் இப்போ
வீட்டுக்கு அழைத்து விட்டார்.

கௌரவமாகத் திரும்பிப் போகிறோமாம்.
'கல்கட்' கூறியிருக்கிறார்
கௌரவத்திற்கும்
களங்கத்திற்கும்
வேறுபாடு விளங்காதவன்.

சூரியனிடம் சொல்லுங்கள்
வெப்பத்தை
வெளியிட வேண்டாமென்று
கங்கைகளை
காவிச் செல்லா வேண்டாமென்று

பூமிக்குச் சொல்லுங்கள்
உணவுப் பொருட்களை
உற்பத்தி செய்யும்படி.

நீரும் உணவும்
அவளின்
நினைவுச் சின்னமல்லவா?

காப்பாற்றி வைத்திருக்கும்படி
உலகின்
கடைசி உயிருக்கும்
கட்டளை பிறப்பியுங்கள்.

இவளின் மரணம்
மக்கள் யுத்தத்தின் ஜனனம்.

அதோ...
இவளின்
சுதந்திரப் பாதையில்
சுவடுகளைப் பதிக்க
கோடி மக்கள்
கொடி பிடித்து வருகின்றார்கள்.

நன்றி: தியாகச்சுடர் அன்னை பூபதி
விடுதலைப் புலிகள்
மகளிர் முன்னணி வெளியீடு

*Srikanthaluxumy. A*
*11/21, Inuvil West*
*Chunnakam*

தாசன் அச்சகம், மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

மறுமலர்ச்சிக் கழகம்
பதிவு இல. 004
யாழ். பல்கலைக் கழகம்